**OS.No**. 250/2017

**DW**5 - மதன்குமார் த/பெ. சோமசுந்தரம்

நாள். 31.10.2023

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என்னுடைய பணியானது தமிழ்நாடு தேர்வாணையத்தின் எந்த பிரிவின் கீழ் வருகிறது என்றால் Group2A தற்போது Group2. Group 2ல் என்ன என்ன பதவிகளுக்காக நடத்தப்படுகிறது என்றால் Group2A உதவியாளருக்காக நடத்தப்படுகிறது. நான் Group 2ஏ தேர்வில் உதவியாளர் பணிக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளேன். எந்த வருடம் என்றால் 2017. எனக்கு உடனடியாக மேல் அதிகாரி யார் என்றால் துணை மாநில வரி அலுவலர். ( Depty Commercial Tax Officer). தற்போது நான் என்ன பணியில் உள்ளேன் என்றால் Depty Commercial Tax Officer.எப்போது பணி உயர்வு என்றால் மூன்று மாதங்கள் இருக்கும்.

2. அழைப்பாணையில் டின் நம்பர் 33662324964 தொடர்பாக பதிவுச் சான்றிதழ் விண்ணப்ப படிவம் பங்குதாரர் ஒப்பந்தம் மற்றும் அதன் உடன் சேர்ந்த ஆவணங்கள் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டு இருந்தது என்றால் ஆமாம். மேற்படி ஆவணங்களின் உண்மை நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அதனுடைய அசல் எப்போது யாரால் மத்திய குற்றப்பிரிவில் ஒப்படைக்கப்பட்டது என்பது தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். மேற்படி ஆவணங்களை பெற்றுக்கொண்டது தொடர்பாக மத்திய குற்றப்பிரிவில் வழங்கப்பட் ஒப்புகை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள Ex Y6ல் 1 முதல் 54 பக்கங்களில் இருக்கக்கூடிய ஆவணங்கள் அனைத்தும் திருப்பூர் Bloom knit Finishers நிறுவனம் ஆரமிக்கப்பட்டதற்கு தொடர்பான விண்ணப்ப படிவம் என்றால் ஆமாம். அதில் பங்குதாரராக கஸ்தூரி மற்றும் ரேனுகாதேவி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். அதில் பக்கம் 77ல் என்ன முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 15/8 குப்பன்ன செட்டியார் வீதி பல்லடம் ரோடு கோயம்புத்தூர் என்பது முதன்மை முகவரியாக காட்டப்பட்டுள்ளது. கிளை முகவரி நம்பர் 30 கிழக்கு தெரு அக்கரஹாரம் சிங்காநல்லூர் கோயம்புத்தூர் என உள்ளது.

3. பொதுவாக ஒரு மாவட்டத்தில் பிரதாண அலுவலம் உள்ள நிறுவனத்திற்குமற்றொரு மாவட்டத்தில் உள்ள கிளை அலுவலகம் ஆரமிக்க விண்ணபிக்கும் போது அதன் தொடர்பான ஆவணங்களை கிளை அலுவலகம் ஆரமிக்க உள்ள மாவட்டத்தில் District Commercial Tax அலுவலகத்திற்கு சரிப்பார்க்க அனுப்பி வைப்போமா என்றால் VAT காலத்தில் என்ன நடைமுறை பின்பற்றப்பட்டது என்பது தெரியவில்லை தற்சமயம் GST காலத்தில் அவர்கள் தாக்கல் செய்த ஆவணங்களில் ஏதாவது சரிப்பார்க்க வேண்டி இருந்தால் மட்டும் அனுப்புவோம். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் 2009 வருடத்திற்குரியது என்றால் ஆமாம். தற்போது நடைமுறை படியும் VAT கால நடைமுறை படியும் பங்குதாரர் நிறுவனம் ஆரமிப்பதாக இருந்தால் அதில் பங்குதாரின் புகைப்படம் ஒட்டப்படும் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள EX Y6 ல் கோயம்புத்தூர் அலுவகத்திற்கு ஆவணங்களை சரிப்பார்க்க அனுப்பி வைத்தற்கான குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள EX Y6 ல் உள்ள 1.5.2009 தேதிய பதிவுச்சான்றிதழில் புகைப்படம் ஒட்டப்படவில்லை என்றால் ஆமாம்.

4. வாதி ஆனவர் குற்றவியர் நீதிதுறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்டுள்ள சான்றிட்ட நகலில் 19.5.2009 தேதிய பதிவுச்சான்றிதழில் புகைப்படம் ஒட்டப்பட்டுள்ளது என்றாலும் அதில் உள்ள புகைப்படத்தை எடுத்துவிட்டு தான் நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் 19.5.2009 ல் தேதிய பதிவுச் சான்றிதழில் புகைப்படம் ஒட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள Ex Y6 ல் இணைக்கப்பட்டுள்ள பதிவுச்சான்றிதழில் போலியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. போலியாக தயார் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி புகைப்படம் Bloom knit Finishers ன் பங்குதாரான கஸ்தூரி என்றால் அது பற்றி தெரியவில்லை. கிளை அலுவகத்திற்கு வழங்கப்பட வேண்டிய உரிமம் குறித்த ஆவணங்கள் பரிசீலனையை எங்களது அலுவலகம் சரிவர செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் என்ன நடைமுறை பின்பற்றப்பட்டது என்பது சரியாது தெரியவில்லை. முறையாக பரிசீலனை செய்யப்பட்டு இருந்தால் கிளை அலுவகத்திற்கு உரிமம் கோரி விண்ணப்பித்த படிவத்தில் ஒட்டப்பட்டுள்ள புகைப்படம் மற்றும் விண்ணப்ப தாரர் கையெழுத்து வேவ்வேறு நபர் உடையது என்பது தெரிய வந்து

இருக்கும் என்றாலும் அவ்வாறு பரிசீலனை சரிவர செய்யப்படாததால் தான் போலியான ஆவணங்களை கொண்டு கிளை அலுவகத்திற்கான உரிமம் பெறப்பட்டுள்ளது என்றாலும் அந்த சமயத்தில் என்ன நடைமுறை பின்பற்றப்பட்டது என்பது சரியாது தெரியவில்லை.

5. கிளை அலுவகத்திற்கு உரிமம் கொடுத்த பின்னர் மாதாமாதம் நடைபெற்ற வியாபார நடவடிக்கைகள் குறித்து Returns சம்பிக்க வேண்டும் என்றால் ஆமாம். அவ்வாறு Returns சமர்பித்தார்களா என்றால் அது தெரியவில்லை. ஒரு வருடமாக தொடர்ந்து Returns சமர்பிக்கப்படவில்லை என்றால் அது தொடர்பாக விளக்கம் கோரப்படும என்றால் ஆமாம். அவ்வாறு விளக்கம் கோரப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்துள்ள Ex Y6 கோப்பில் இல்லை என்றால் ஆமாம். அவ்வாறு விளக்கம் கேட்டு Returns சமர்பிக்கவில்லை என்றால் மேற்படி கிளை நிறுவனத்திற்கான உரிமத்தை ரத்து செய்யவும் அதிகாரம் Assistant Commissioner of Commercial Tax Officer க்கு உள்ளது என்றால் ஆமாம். அவ்வாறு விளக்கம் கேட்டு விளக்கம் தராத நிலையில் எங்களுடைய அலுவலர்கள் மேற்படி கிளை அலுவலகத்தில் சென்று ஆய்வு செய்வோமா என்றால் பிரதாண அலுவலகத்தை தான் ஆய்வு செய்வோம். பிரதாண அலுவகத்தில் போதுமான விளக்கம் அளிக்கவில்லை என்றால் தான் கிளை அலுவலகத்தில் ஆய்வு செய்வோம்.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI
Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.10.31 18:43:30 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.